# ஒன்ட்டேரியோ அரசாங்கம் வீட்டிலேயே இருங்கள் என்னும் உத்தரவினை அமலாக்கம் செய்வதை வலியுறுத்துகிறது மற்றும் பல பொது சுகாதார நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 16, 2021) – இன்றைய தினம், ஒன்ட்டேரியோ அரசாங்கம் வீட்டிலேயே இருக்கவும் என்னும் மாகாண ரீதியான உத்தரவினை அமலாக்கம் செய்வதை வலியுறுத்துவதாக அறிவித்தது; அதே சமயத்தில் பயணம் செய்வதற்கான கட்டுப்பாடுகளை விதித்ததுடன், பல பொது சுகாதார நடவடிக்கைகளையும் மேலும் வலுப்படுத்துகிறது.

**அமலாக்கம்**

வீட்டிலேயே இருக்கவும் எனும் உத்தரவுக்கு பொது மக்கள் இணங்குவதை அதிகரிக்கே செய்யவும், COVID-19 பரவுவதைத் தடுத்து நிறுத்தவும், அவசரகால உத்தரவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன; இது, போலீஸ் அதிகாரிகள் மற்றும் பிற மாகாண குற்றவியல் அதிகாரிகளுக்கு, ஒன்ட்டேரியோவின் *வீட்டிலே இருக்கவும் எனும் ஆணையை* அமல்படுத்துவதற்கான அதிகாரத்தை வலுவானதாக்கும்.

ஏப்ரல் 17, 2021 சனிக்கிழமை காலை 12:01 மணி முதல், காவல்துறை அதிகாரிகள் மற்றும் பிற மாகாண குற்றவியல் அதிகாரிகளுக்கு, எந்தவொரு நபரும் அவர்களின் இல்லத்தில் தங்காத பட்சத்தில், தங்கள் வீட்டு முகவரியையும் காரணத்தையும் வழங்குமாறு கோர அதிகாரம் இருக்கும். கூடுதலாக, தனது வீட்டை விட்டு வெளியேறியதற்கான ஒரு நபரின் காரணங்களை விசாரிக்கவும் அவரது வாகனத்தை நிறுத்தவும் காவல்துறை அதிகாரிகள், சிறப்பு கான்ஸ்டபிள்கள் மற்றும் ஃபர்ஸ்ட் நேஷன் கான்ஸ்டபிள்களுக்கு அதிகாரம் இருக்கும். இந்த கூடுதல் அமலாக்கமானது வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் எனும் உத்தரவின்போது மட்டுமே செயல்படும் மற்றும் இது வீட்டிலேயே தங்குவதற்கான உத்தரவை அமல்படுத்துவதற்காக மட்டுமேயாகும்.

**பொதுமக்கள் மீது அதிக அதிகாரம் செலுத்தும் சுகாதார நடவடிக்கைகள்**

கோவிட்-19 தொற்று பரவுவதைத் தடுக்க உதவுவதற்காகவே, மாகாண அவசரகால அறிவிப்பு மற்றும் வீட்டிலேயே இருப்பதற்கான உத்தரவு ஆகியவை கூடுதலாக இன்னும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. வீட்டிலேயே இருப்பதற்கான உத்தரவானது, எல்லோரும் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்; இதில் மளிகை கடைக்கு அல்லது மருந்தகத்திற்குச் செல்வது, சுகாதார சேவைகளை அணுகுவது, உடற்பயிற்சி அல்லது அத்தியாவசிய வேலைகள் போன்ற அத்தியாவசிய நோக்கங்களுக்காக செல்வதற்கு விதிவிலக்கு உண்டு.

ஏப்ரல் 17, 2021 சனிக்கிழமை காலை 12:01 மணி துவங்கி, பின்வரும் பொது சுகாதாரம் மற்றும் பணியிட பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது:

- ஒரே வீட்டில் வசிக்கும் குடும்ப உறுப்பினர்கள் அல்லது அந்த வீட்டுக்கு வெளியில் தனியாக வசிக்கும் வேறு ஒரே ஒரு நபர், அல்லது வீட்டின் எந்தவொரு உறுப்பினருக்கும் பராமரிப்பு அளிக்க வருகின்ற ஒரு பராமரிப்பாளரைத் தவிர, அனைத்து வெளிப்புற சமூகக் கூட்டங்களையும் ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்வுகளையும் தடைசெய்யவும்;
- கட்டுமானத் துறையில் அத்தியாவசியமற்ற அனைத்து பணியிடங்களையும் மூடவும்;
- அனைத்து சில்லறை அமைப்புகளிலும் கடையில் ஷாப்பிங் செய்ய அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கான எண்ணிக்கை வரம்புகளை 25 சதவீதமாகக் குறைக்கவும். இதில் பல்பொருள் அங்காடிகள், மளிகைக் கடைகள், வசதிப்பொருள் விற்கும் கடைகள், விவசாயிகளுக்கான உள்ளரங்க சந்தைகள், உணவு மற்றும் மருந்தகங்களை முதன்மையாக விற்கும் பிற கடைகள் ஆகியன அடங்கும்; மற்றும்,
- கோல்ப் மைதானங்கள், கூடைப்பந்து மைதானங்கள் மற்றும் கால்பந்து மைதானங்கள் போன்ற அனைத்து திறந்தவெளி பொழுதுபோக்கு விளையாட்டு மைதானங்கள் மற்றும் களங்களை, வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுடன் மூடவும்.

இதற்கும் கூடுதலாக, ஏப்ரல் 19, 2021 திங்கட்கிழமை அதிகாலை 12:01 மணி துவங்கி, திருமணங்கள், இறுதிச் சடங்குகள் மற்றும் மத சேவைகள், சடங்குகள் அல்லது காரியங்கள் ஆகியவற்றில், கட்டிடங்களுக்கு உள்ளாகவோ அல்லது திறந்தவெளியிலோ 10 பேர் மட்டுமே கூடலாம் என மாகாண நிர்வாகம் மட்டுப்படுத்துகிறது. இந்த சேவைகளுடன் தொடர்புடைய வரவேற்புகள் போன்ற சமூகக் கூட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன, இதில் ஒரே வீட்டின் உறுப்பினர்கள் அல்லது அந்த வீட்டுக்கு வெளியில் தனியாக வசிக்கும் வேறு ஒரே ஒருவர் விதிவிலக்கு பெறுகிறார்கள். டிரைவ்-இன் சேவைகள் அனுமதிக்கப்படும்.

மாகாணம் தழுவிய அவசரநிலை தடை (provincewide emergency brake) (அதாவது, போகிறபோக்கில் எட்ட இருந்து எடுத்துக்கொள்ளுதல் அல்லது சேர்ப்பித்தல் மட்டுமே) கீழாக அத்தியாவசியம் அல்லாத சில்லறை விற்பனைப் பொருட்களுக்கு, அனைத்து பிற பொது சுகாதாரம் மற்றும் பணியிட நடவடிக்கைகள் பிரயோகமாகும்.

மேலும் படிக்க இங்கு வரவும்

**நகர சேவைகள் மற்றும் கட்டிட வசதிகள்**

***நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள்***

*நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளும் சேவைகளுக்கு*

*திறந்திருக்கும்-இவை முன்பதிவின் பேரில் மட்டுமே. நேரில், போகிறபோக்கில் வருவதற்கு அனுமதியில்லை. முன்பதிவு செய்துகொள்ள வருகைதரவும் www.brampton.ca/skiptheline.*

***நகரின் பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் திறந்தவெளி  வசதிகள்***

*ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து பொழுதுபோக்கு வசதி கட்டிடங்களும் மூடப்பட்டிருக்கும் மற்றும் உள்ளரங்க நிகழ்ச்சிகள் அடுத்த அறிவிப்பு வரும் வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டபடியே இருக்கும்.*

கோல்ப் மைதானங்கள், கூடைப்பந்து மைதானங்கள் மற்றும் கால்பந்து மைதானங்கள் போன்ற அனைத்து வெளிப்புற பொழுதுபோக்கு விளையாட்டு மைதானங்கள் மற்றும் களங்கள் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுடன் மூடப்படும். விளையாட்டு மைதான்ங்கள் திறந்திருக்கும்.

பூங்காக்கள் நடை பாதைகள் திறந்திருக்கும். பூங்காக்களில் உள்ள கழிப்பறை வசதிகள் மூடப்படும்.

***மெய்நிகர் நிகழ்ச்சிகள்***

<u>மெய்நிகர் உடற்பொருத்தம்</u>

பயிற்சி பெற்ற பயிற்றுவிப்பாளர் நடத்தும் 30-நிமிட நேர, இலவச உடற்பொருத்த பயிற்சிகளுக்கான மெய்நிகர்  வகுப்புகளில் பங்கேற்க குடியிருப்புவாசிகள் அழைக்கப்படுகிறார்கள்.

55 வயதுக்கு மேற்பட்டோருக்கான வகுப்புகள்

ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற 55 வயதுக்கு மேற்பட்ட குடியிருப்புவாசிகள் தங்கள் வீட்டில் இருந்தபடியே பங்கேற்கும் விதமான மெய்நிகர் பயிற்சி வகுப்புகளுக்கு பதிவு செய்து கொள்ளலாம். பங்கேற்பாளர்கள் தங்களை சமூகத்தினருடன் இணைத்துக்கொள்ளவும், புதிய நண்பர்களை சேர்த்துக்கொள்ளவும்  தொடர்ந்து ஆன்லைனில் இருந்தபடி கட்டுக்கோப்பான ஒரு சூழலை அமைத்துக் கொள்ளலாம்.

<u>அனைத்தும் உள்ளடங்கிய மெய்நிகர் செயல்பாடுகள் மற்றும் பயிற்சியகங்கள்</u>

இந்த வசதியானது உடற்குறைபாடுகள் விதிவிலக்கான தன்மைகள் கொண்டோருக்கான அருமையான சந்தர்ப்பமாகும்; இதன்மூலமாக, சுறுசுறுப்பான செயல்பாடுகளில் சேரலாம், புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம், ஒத்த வயதினருடன் நீடித்த நட்புறவை வளர்க்கலாம்.

வழங்கப்படவிருக்கின்ற மெய்நிகர் நிகழ்ச்சிகள் பற்றிய மேலும் தகவல்களுக்கும், இதற்கு எப்படி பதிவு செய்துகொள்வது என்பதற்கும் வருகை தரவும்: www.brampton.ca/recreation.

***வீட்டில் இருந்தபடி புத்துணர்வாதல்***

வீட்டில் இருந்தபடியே செயல்பாட்டுடனும் சுறுசுறுப்புடனும் இருங்கள்; சுயமாக கற்றுக்கொள்ளும் ஆன்லைன் கலைகள் மற்றும் கைவினைகளுக்கான பயிற்சிகள் அனைத்தும் 24/7 என்ற முறையில் கிடைக்கின்றன! காகிதப் பூக்கள் செய்வது எப்படி எனக் கற்றுக்கொள்ளுங்கள்; உங்கள் கையெழுத்தினை மேம்படுத்திக்கொள்ள பயிற்சி செய்யுங்கள். வீட்டில் இருந்தபடியே புத்துணர்வாக்கிக் கொள்வதற்கான பல வழிகளை இங்கு காணுங்கள்; இவையனைத்தும் ப்ராம்ப்ட்டன் ரிக்ரியேஷன் (Brampton Recreation) அமைப்பினால் பாசத்துடன் கொடுக்கப்படுகின்றன. .

**முகத் திரைகள் கட்டாயம்**

கட்டாய முகத்திரைகளுக்கான உப சட்டங்களின்படி, ப்ராம்ப்ட்டனில் உள்ள அனைத்து பொது கட்டிடங்களின் உட்புங்களிலும் மருத்துவம் அல்லாத முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அவசியம். பொது நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற உள்ளரங்க பொது இடங்களில் முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணியப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மருத்துவ காரணங்களால் முக கவசம் அல்லது முகத்திரையை அணிய முடியாதவர்கள் உள்ளிட்ட இந்த சில நபர்களுக்கு துணை சட்டம் விலக்கு அளிக்கிறது: இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள்; அவசர உத்தரவுகளின்படி தடகள நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள். மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/masks.

கூடுதல் தகவல் மற்றும் சேவை கோரிக்கைகளுக்கு குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்கள் 311 ஐ அழைக்கலாம், www.311brampton.ca க்கு வருகை தரலாம் அல்லது 311 மொபைல் செயலியை பயன்படுத்தலாம்..

**லின்குகள்**

இவை பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் சேவை பற்றிய புது செய்திகள் (City of Brampton COVID-19 programming and service updates)
- ப்ராம்ப்ட்டன் நகரில் திறந்திருப்பவை எவை, மூடியிருப்பவை எவை (City of Brampton – what's open, what's closed)

- [கோவிட்-19 க்கான அறிகுறிகள் (COVID-19 Symptoms)]
- [கோவிட்-19 தடுப்பு மருந்து (COVID-19 vaccine)]
- [ப்ராம்ப்ட்டனில் சோதனை செய்துகொள்ளுதல் (Testing in Brampton)]
- [தனிமைப்படுத்திக்கொள்வது எப்படி (How to self-isolate)]
- [கோவிட்-19 தொற்றுப்பரவல் காலத்தில் வணிகங்கங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)]
- [பீல் பகுதியில் கோவிட்- 19 நோயாளிகள் (Cases of COVID-19 in Peel)]

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca